## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.221/2024

நாள்: 27.07.2026

வா.சா. 3 – கோவிந்தராஜ்

2026–ம் ஆண்டு ஜுலை 27–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. தாவா சொத்தில் தான் வாதி குடியிருக்கிறார் என்றால் சரிதான். அம்பேத்கர் தெருவில் தாவா சொத்தில் உள்ள வீட்டை தவிர வேறு வீடோ, மனையோ வாதியின் கணவர் சக்கரவரத்திக்கு இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு வடபுறம் சிமெண்ட் ரோடு உள்ளது என்றால் சரிதான். தென்புறம் 1ம் பிரதிவாதியின் கிரய மனை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கு கீழ்புறம் 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய இடம் உள்ளது என்றால் இல்லை. இரத்தினசாமி என்பவர் என்னுடைய சித்தப்பா என்றால் சரிதான். இரத்தினசாமியின் மனைவி பெயர் மெல்லியம்மாள் என்றால் சரிதான். இரத்தினசாமியின் மகன்கள் பெயர் திருமுருகன், ராஜுவ்காந்தி என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கீழ் புறம் உள்ள சொத்தை இரத்தனசாமி, மெல்லியம்மாள், திருமுருகன், ராஜுவ்காந்தி ஆகியோர்களிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. தாவா சொத்திற்கு கீழ் புறம் உள்ள சொத்து சம்மந்தமாக இரத்தனசாமி, மெல்லியம்மாள், திருமுருகன், ராஜுவ்காந்தி ஆகியோர்களுக்கு எதிராக 1ம் பிரதிவாதி ஜெயங்கொண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சிவில் வழக்கு போட்டுள்ளார் என்றால்

தெரியாது. என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி சர்வே எண்.170/1-ல் 2 ½ செண்ட்டை நான் பெற்றுக்கொண்டு, தாவா சொத்தில் 2 ½ செண்ட்டை விட்டுக்கொடுத்ததாக சொல்வது பொய் என்றாலும் அதுபோல் நடந்திருந்தால் நான் யாருக்கு கொடுத்தேன் என்றும் யாரிடம் இருந்து பெற்றுக்கொண்டேன் என்பதையும் தெளிவாக சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு தெரியுமா என்றால் தெரியாது. ரூ.100 மதிப்புக்கு மேல் உள்ள அசையா சொத்துகளை பதிவு செய்யாமல் கிரயம் கொடுக்க முடியாது என்றாலும் கிரயம் கொடுத்தால் செல்லாது என்றாலும் அந்த உரிமை மாற்றமும் செல்லாது என்றால் சரியல்ல. வாதி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் தான். தங்கவேல், இரத்தினசாமி மற்றும் ரெங்கசாமி ஆகியோர்கள் சகோதரர்கள் என்பதும் அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டது வாதிக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்குரையில் இல்லாத விவரத்தை நான் சொல்லியுள்ளது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு பதிலாக வேறு சொத்தை பெற்றுக்கொண்டதாக சொல்வதும், பட்டா மாற்றிக்கொள்ள ஒப்புதல் தெரிவித்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை வாதி வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் நம்பத்தகுந்தல்ல என்றாலும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும் சரியல்ல. தாவா தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.